தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 11-12-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் காடுகள் கொள்கை (2014) வழிகாட்டு நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவது குறித்த கருத்தரங்கு

இன்றைய சூழலில் வேளாண்மை சார்ந்த நிலபயன்பாட்டு முறைகளில் வேளாண்காடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நம் நாட்டில் சிறு மற்றும் குறு விவசாயிகளே வேளாண்மையில் அதிக பங்கு வகிக்கின்றனர். எனவே அவர்களின் செயல் திறனைப் பொருத்தே நாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவும், கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புப் அமைகிறது. ஏனவே விவசாயிகள் தங்களுடைய சொந்த தேவைகளுக்கும், தொழிற் சாலைகளின் மூலப்பொருள் தேவைகளுக்கும் பலதரப்பட்ட மரங்களை வளர்த்து அவர்களுடைய வாழ்வாதாரத்தையும் வருமானத்தையும் பெருக்குவதற்கு வேளாண்காடுகள் பெரிதும் உதவுகின்றன. வேளாண் காடுகள் கார்பன் சேகரிப்பு, உயிரின பன்மைப் பாதுகாப்பு, நீர் மற்றும் நிலவள பாதுகாப்பு போன்ற சூழல் சேவைகளை புரிகின்றன. மேலும், வேளாண்காடுகளின் மூலம் கிராம மற்றும் நகர்புறங்களில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கின்றன.

நம் நாட்டின் மொத்த தடி மரத்தேவையில், 65% வேளாண்காடுகள் மூலமாகவே கிடைக்கின்றது. அதேபோல் நாட்டின் வனப்பரப்பை 33% உயர்த்துவதற்கு வேளாண்காடுகள் ஒரு முக்கிய பங்கு வகுக்கும் என்று 1988 தேசிய வனக்கொள்கை வரையறுத்துள்ளது. இத்ததைய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண்காடுகளளை ஊக்குவிக்கவும், பரப்பை அதிகப்படுத்தவும்

தேசிய வேளாண்காடுகள் கொள்கையை 2014-ம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது. கொள்கை அறிவிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கழிந்த நிலையிலும் இக்கொள்கையினை நடைமுறைப்படுத்த செயல் திட்டங்கள் வகுக்கப்படவில்லை.

இச்சூழலில், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நபார்டு வங்கியுடன் இணைந்து ஒரு தேசிய கருத்தரங்கை டிசம்பர் 10-11, 2015 தேதியன்று நடத்தியது. இக்கருத்தரங்கில், விஞ்ஞானிகள், மரம் சார்ந்த தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள், மர நாற்றாங்கால் உற்பத்தியாளர்கள், காப்பீட்டு நிறுவனங்கள், வங்கி பிரதிநிதிகள், விவசாயிகள், வனத்துறை மற்றும் வேளாண்துறை அதிகாரிகள், ஏற்றுமதியாளர்கள், வேளாண்காடுகள் உற்பத்தியாளர் சங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள், வேளாண் காடுகள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் என 150 பேர் கலந்து கொண்டு தங்களுடைய அனுபவங்களையும், கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்க கழக துணைவேந்தர் முனைவர்.கு.இராமசாமி அவர்கள் கருத்தரங்கை துவக்கிவைத்தார்கள். தமிழக வனத்துறையின் முதன்மை தலைமை வன பாதுகாவலர் (ஆராய்ச்சி மற்றும் கல்வி), முனைவர் ச.பாலாஜி, இ.வ.ப. மற்றும் நபார்டு வங்கியின் தலைமைப் பொதுமேலாளர் திரு.வெங்கடேஸ்வர ராவ் ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக கலந்துக் கொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் க.கு.சுரேஷ் மற்றும் கருந்தரங்க செயலாளர் முனைவர் கா.த. பார்த்திபன் ஆகியோர் கருந்தரங்கிணை ஒருங்கிணைத்து நடத்தினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்